Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, OCTOBER 02, 2023

திங்கட்கிழமை ஒக்டோபர் 02, 2023 | ஒளி: 09 கதிர்: 096 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## இன்று நள்ளிரவு விலைத் திருத்தம்



விலை சூத்திரத்தின்படி, ஒக்டோபர் மாத எரிபொருள் விலை திருத்தம் திங்கட்கிழமை (02) நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எரிபொருள் விலைத் திருத்தம் சனிக்கிழமை (30) நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட வேண்டியிருந்தாலும், விடுமுறை நாளாக இருந்ததால் திங்கட்கிழமை (02) வரையிலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



நீதிபதி சரவணராஜா மீதான உயிர் அச்சுறுத்தல்:

# புதனன்று சங்கிலி போராட்டம்

பு.கஜிந்தன்

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக தனது பதவியை, செப்டெம்பர் 23ஆம் திகதியன்று இராஜனாமா செய்துள்ளதுடன் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

தொடர்ச்சி P2

## "அதிகார துஷ்பிரயோகம்"



நீதித்துறையை கேலிக்குள்ளாக்கிய ஒருவரது நிலைப்பாட்டுக்கு அமைவாக சட்டமா அதிபர் திணைக்களமும் செயற்பட்டுள்ளமை அதிர்ச்சியை தருகிறது என்று தெரிவித்துள்ள குழுக்களின் பிரதி தலைவர் அங்கஜன், நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு அழுத்தங்கள் ிரயோகிக்கப்பட்டுள்ளமை மோசமான அதிகார துஷ்பிரயோகமாகும் என்றார்.

பு.கஜிந்தன்

## நீதிபதிகளின் விடுமுறை நடவடிக்கை இறுக்கம்

கீழ் நீதிமன்றங்களின் மேலதிக மாவட்ட நீதிபதிகள் மற்றும் மேலதிக நீதவான்கள் மத்தியில், பதில் கடமை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படும், நீதி அதிகாரிகளின் விடுமுறைக்காலத்தை உள்ளடக்கிய பரஸ்பர ஏற்பாடுகள் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் தடை செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



நீதிபதி சரவணராஜா விவகாரம்;

# BASL கண்டனம்

■ 'நீதிபதிகள் பயம், மிரட்டல் இல்லாமல் கடமைகளை ஆற்றக்கூடிய சூழலை பராமரிப்பதில் நாங்கள் உறுதியாக நம்புகிறோம்"

நீதித்துறை உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் மற்றும் வன்முறைகள் இடம்பெறுவதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்(BASL) வன்மையாகக் கண்டித்துள்ளது.

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) விடுத்துள்ள அறிக்கையிலே யே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஊடக அறிக்கையை BASL தலைவர் கௌசல்யா நவரத்ன மற்றும் அதன் செயலாளர் இசுரு பாலபடபெந்தி ஆகியோர் வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு நீதிபதியின் இராஜினாமா இலங்கையில் நீதித்துறை அதிகாரிகளின் பாதுகாப்பு குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பக்கூடும் என்று BASL எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே, இச்சம்பவம் குறித்து முழுமையான பாரபட்சமற்ற விசாரணையை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை BASL வலியுறுத்துகிறது.

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா அச்சுறுத்தல் காரணமாகவே பதவி விலகுவதாகக் கூறி நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடம் தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கும், நீதித்துறையின் அனைத்து உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும் உறுதியளித்துள்ளதாக BASL தெரிவித்துள்ளது.

"நீதிபதிகள் பயம் அல்லது மிரட்டல் இல்லாமல் தங்கள் கடமைகளை ஆற்றக்கூடிய சூழலை பராமரிப்பதில் நாங்கள் உறுதியாக நம்புகிறோம்" என்று BASL அறிக்கை மேலும் கூறியது.

## "கடிதம் கிடைக்கவில்லை"



தமக்கு ஏற்பட்ட உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவியை இராஜினாமா செய்த முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரீ.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பான கடிதம் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதவான் பதவி விலகல் தொடர்பில் சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய தகவலிலேயே நீதி அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள ஐந்து வழக்குகளுக்கு அவர் பிரதிவாதியாக நீதிபதி ரீ.சரவணராஜா பெயரிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## ஜனாதிபதி உத்தரவு

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளை மேற்கொ ண்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா பதவி விலகியமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

## "மற்றுமொரு கரும்புள்ளி"



தொடர் அழுத்தங்கள் காரணமாக நீதவான் ரி.சரவணராஜா பதவியிலிருந்து விலகி, நாட்டை விட்டு வெளியேறியமை நீதித்துறையின் சுயாதீனத்தன்மை மீது விழுந்த மற்றுமொரு கரும்புள்ளியாகும் என்று தெரிவித்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமிழ் மக்கள் உள்ளக விசாரணையையும் நீதிப் பொறிமுறையையும் நம்பமுடியாது என்பதை இது உறுதி செய்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளது.

## "அமைச்சரவையில் பிரஸ்தாபிப்பேன்"



"சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதில் நீதிபதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். எனவே, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிய டி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும்." என்று வலியுறுத்தியுள்ள அமைச்சருமான ஜீவன் தொண்டமான் அமைச்சரவைக் கூட்டத்தின்போது இது தொடர்பில் பிரஸ்தாபிக்கவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## "நீதித்துறை மீது அதிருப்தியுண்டு"

பு.கஜிந்தன்



நீதித்துறை பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகிறது. அது தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தியும் உண்டு. ஆனால், என்னைப் பொருத்தவரை நீதித்துறை சுயாதீனமாக இயங்க வேண்டும் என்று தெரிவித்துள்ள முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான அமைப்பின் தலைவருமான கரு ஜயசூரிய, குருந்தூர் மலை பிரச்சினையால் ரத்த வெள்ளம் ஏற்பட இருந்தது. எனினும், நாம் விரைவாக செயல்பட்டு இவ்வாறு இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளோம் என்றார்.

## "ஒரு சவால்"



நீதித் துறையை பாதுகாக்கின்ற போது நீதிபதிகளுக்கு அச்சுறுத்தல் செய்வதை நாங்கள் கண்டிக்க வேண்டும், தடுக்க வேண்டும். அதே வேளையிலே நீதித் துறைக்கு உள்ளேயே தவறுகள் இருந்தால் அதனை திருத்துகின்ற வகையிலே நாங்கள் செயற்பட்டுக் கொள்ள

தொடர்ச்சி P2

## "இனவெறிக் கூச்சலின் விளைவு"

பு.கஜிந்தன்



பாராளுமன்றத்துக்கு உள்ளே எழுப்பப்பட்ட இனவெறிக் கூச்சல்களுக்கு அப்பால், அதிகாரத் தரப்பினால், நேரடியாகவும் மறைமுகமாகவும் நீதிபதி மீது பிரயோகிக்கப்பட்ட உளவியல் ரீதியான அழுத்தங்களே, அவரை இந்த முடிவுக்கு தள்ளியிருக்கின்றன என்பது தெட்டத் தெளிவானது என்று தெரிவித்துள்ள தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா.

பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அனுசரணையாக, வளைந்து கொடுக்க மறுத்திருந்த காரணத்தினால் தான், அவருக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கின்றது என்றார்.

## "பேரினவாதம் சினம் கொண்டுள்ளது"

பு.கஜிந்தன்



நீதியின்பால்பட்டு துணிச்சலாக நீதிபதி ஒருவர் செயற்படும்போது சிங்கள □ பௌத்த பேரினவாதம் எவ்வாறு சினம் கொள்ளும் என்பதற்கு இது சிறந்த எடுக்காட்டு என்ற தெரிவித்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், .

இதுதான் இலங்கை அரசாங்கத்தினதும் அதன் நிறுவனங்களினதும் கொள்கை.

சிங்கள □ பௌத்த பேரினவாதத்துக்கு எதிராக எவர் செயற்பட்டாலும் அவர்களைத் தூக்கி மிதிப்பதற்கு சிங்கள தேசம் தயங்காது என்பதற்கு மிகப் பொருத்தமான உதாரணமாகும்.

## "சர்வதேசமே கண்திறந்து பார்"



நீதிபதிக்கே உயிர் அச்சுறுத்தல் உள்ள நாட்டில் எமக்கான நீதி எப்போது? சர்வதேசமே கண்திறந்து பார் எனும் கோரிக்கையுடன் கையளித்த சிறுவர்களுக்கான நீதி கோரி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், சர்வதேச சிறுவர் தினமான ஒக்டோபர் 1ஆம் திகதி போராட்டத்தை முன்னெடுத்தனர்

கடந்து 2027.03.08 முதல் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகளால் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## 'நிபா' வைரஸ் குறித்து அச்சம் வேண்டாம்




பொது மக்கள் மத்தியில் நிபா வைரஸ் குறித்த அச்சம் அதிகரித்து வரும் நிலையில், இந்தியாவில் இருந்து இலங்கைக்கு பரவும் நிபா வைரஸ் அச்சுறுத்தல் குறைவாகவே இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய மாநிலமான கேரளாவில் இருந்து நிபா பரவுவது தொடர்பாக இலங்கை குறைந்த ஆபத்தை எதிர்கொள்கிறது என்றும், நோய்க்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்கா ட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பிளாஸ்டிக் தடை அமுல்



ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனைக்கான தடை ஞாயிற்றுக்கிழமை (01) முதல் அமலுக்கு வருகிறது.

அதன்படி, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் கோப்பைகள், தட்டுகள், ஸ்ட்ரோக்கள், கத்திகள், முள்ளுக் கரண்டிகள், தயிர் கோப்பைகள்,

தொடர்ச்சி P2

புதிய திருத்தத்தில்

# 80% அதிகரிக்கும்

இலங்கை மின்சார சபை கோரியுள்ள புதிய கட்டணத் திருத்தத்துக்கு அமைவாக, 0-30 அலகுகளுக்கு நுகர்வோர் செலுத்த வேண்டிய கட்டணம் 80 சதவீதத்தால் அதிகரிக்கப்படும் என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை கோரும் கட்டணத் திருத்தம் சட்டவிரோதமானது என்றும் 22 சதவீதம் அல்லது அனைத்து அலகுகளுக்கும் 8 ரூபாய் அதிகரிப்பு கோரப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## "நீதிமன்றங்களின் செயற்பாடுகளை சட்டத்தரணிகள் புறக்கணிக்கவும்"

பு.கஜிந்தன்




"முல்லைத்தீவு நீதவான் ரி.சரவணராஜா, உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவியை இராஜினாமா செய்துவிட்டு நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். இதற்கு சரத் வீரசேகர எம்.பியே முழுக் காரணம். எனவே, வடக்கு □ கிழக்கிலுள்ள நீதிமன்றச் செயற்பாடுகளை சட்டத்தரணிகள் புறக்கணித்து எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ். நிஷாந்தன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் ஞாயிற்றுக்கிழமை (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

" பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு பௌத்த துறவிகளைத் தூண்டி இனவாதச் செயற்பாடுகளை சரத் வீரசேகர முன்னெடுக்கிறார். எனவே, இந்த அரசாங்கத்தில் அவர் வகிக்கும் பதவிகள் பறிக்கப்பட வேண்டும்"

" தமிழ் நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடிய கவனம் எடுத்து செயற்படுவதோடு பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# புதுனன்று சங்கிலி போராட்டம்

குறித்த இந்த சம்பவம் பெரும் நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன இந்நிலையில் தமிழ் தேசியக் கட்சிகள் யாழில் உள்ள தனியார் விடுதியில் ஒன்றுகூடினர்.

தமிழ் நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை குறித்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் காத்திரமான முடிவை எடுக்க வேண்டும், தமிழர்களின் இருப்பை உறுதி செய்ய வேண்டும் என பலராலும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுவரும் நிலையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் சரவணராஜாவின் பதவி விலகல் குறித்து தமிழ் மக்களின் எதிர்ப்பை காண்பிக்க போராட்டங்களை நடத்த தமிழ் தேசிய கட்சிகள் தீர்மானித்துள்ளன. இதன்படி எதிர்வரும் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மிக பெருமெடுப்பில் போராட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது .

யாழ்ப்பாண மருதனார் மடத்தில் இருந்து யாழ்ப்பாணம் நகர் வரை மனித சங்கிலி போராட்டம் நடத்தப்படவுள்ளது. பின்னர் முல்லைத்தீவை முடக்கி போராட்டம் நடத்தப்படவுள்ளது. இதற்கான திகதி இதுவரை அறிவிக்கபபடவில்லை.

# இன்று நள்ளிரவு விலைத் திருத்தம்



செப்டெம்பர் 1ஆம் திகதி இடம்பெற்ற எரிபொருள் விலை திருத்தத்தின் போது அனைத்து எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த முறையும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படாலம் என்று அறியமுடிகிறது.

# நீதிபதிகளின் விடுமுறை நடவடிக்கை இறுக்கம்

நீதிச் சேவை ஆணைக்குழு வெளியிட்டுள்ள புதிய சுற்றறிக்கையின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை (01) முதல் இந்த நடவடிக்கை அமுலுக்கு வருகிறது.

கீழ் நீதிமன்றங்களின் நீதித்துறை அதிகாரிகளால் விடுமுறை பெறுவது தொடர்பாக எழுப்பப்பட்ட கரிசனைகளை நிவர்த்தி செய்யும் வகையில் குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்தந்த திணைக்களத் தலைவர் மூலமாக மட்டுமே விடுமுறை நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய மேலதிக மாவட்ட நீதிபதிகள் மற்றும் மேலதிக நீதவான்கள் மூலம் ஏதாவது விடுமுறை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படின் அவை அந்தந்த திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் வழங்கப்பட்ட விதிமுறைகளின்படி நீதிச் சேவை ஆணைக்குழு செயலகத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறை அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்படும் அனைத்து விடுமுறை விண்ணப்பங்களையும் தாமதமின்றி அதன் செயலகத்துக்கு அனுப்புவது திணைக்களத் தலைவரின் பொறுப்பாகும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# 'நிபா' வைரஸ் குறித்து அச்சம் வேண்டாம்

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் 6 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டு அதில் இருவர் உயிரிழந்துள்ள நிலையில், பாதிக்கப்பட்ட நோயாளிகளின் சாத்தியமான தொடர்புகள் என்று சந்தேகிக்கப்படும் 700 க்கும் மேற்பட்ட நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நோய்த்தொற்றுக்காக அவர்கள் பரிசோதிக்கப்பட்ட போது, செப்டம்பர் 22 வரை எந்த



நேர்மறையான அறிக்கையும் இல்லை என்றும் கடந்த 5 ஆண்டுகளில் கேரளாவைத் தாக்கும் நான்காவது நிபா பாதிப்பு இது என்றும் தொற்றுநோயியல் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

ஒவ்வொரு முறையும், நோய் நன்கு கட்டுப்படுத்தப்பட்டதாகவும், தொற்றுப் பகுதிக்கு அப்பால் பரவாமல் இருப்பதை உறுதிசெய்ய சரியான நேரத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் பிரிவு குறிப்பிட்டது.

# பிளாஸ்டிக் தடை அமுல்



கரண்டிகள், பிளாஸ்டிக் இடியப்பத் தட்டுக்ள், மாலைகள் மற்றும் இதுபோன்ற ஏனைய பொருட்களுக்கு நாட்டில் தடை விதிக்கப்படவுள்ளது.

சுற்றாடல் அமைச்சு பல சந்தர்ப்பங்களில் ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களின் இறக்குமதி, உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவற்றை தடை செய்தது.

ஜூன் 1ஆம் தேதி முதல் அமுலுக்கு வரும் வகையில், பல ஒற்றைப் பயன்பாட்டு மற்றும் குறுகிய கால பிளாஸ்டிக் பொருட்களை இறக்குமதி செய்வதைத் தடை செய்யும் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது.

இதனிடையே, ஞாயிறு முதல் விற்பனைக்கு வரும் தடை செய்யப்பட்ட பொருட்களை பறிமுதல் செய்யும் முயற்சியில் சோதனை நடத்தப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# "சர்வதேசமே கண்திறந்து பார்"




போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீதிபதிக்கே உயிரச்சுறுத்தல் உள்ள நாட்டில் எமக்கு நீதி எப்போது?, "சர்வதேசமே எமக்காக குரல் கொடுக்க எழுந்திரு", "கையளிக்கப்பட்ட மாணவர்கள் எங்கே?', 'குடும்பமாக ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் எங்கே?', தமிழ் குழந்தைகள் என்ன பயங்கரவாதிகளா?, சின்னஞ்சிறு சிறார்களும் ஆயுதம் ஏந்தியவர்களா?, பாடசாலை சென்ற மாணவன் எங்கே? போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பினர்.

இலங்கையில் காணாமல்போன தமிழ் சிறுவர் மற்றும் குழந்தைகளின் படங்களையும் இதன்போது கைகளில் ஏந்தியிருந்தனர்.

# "ஒரு சவால்"

கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இன்றைக்கு நீதித்துறை விசேடமாக ஒரு சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றார்.



பு.கஜிந்தன்

# "நீதிமன்றங்களின் செயற்பாடுகளை சட்டத்தரணிகள் புறக்கணிக்கவும்"

மக்கள் மட்டும் தான் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் அல்லது மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களைத் தான் நடத்த வேண்டும் என்றில்லை. பாராளுமன்றத்திற்கு வெளியே போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்" என்றார்.

# 80 % அதிகரிக்கும்

அனல் மின் நிலையங்களிலிருந்து பற்றாக்குறையாகவுள்ள 750 கிகாவோட் நீர் மின் உற்பத்தியை பெறுவதற்கான மேலதிக செலவை மீட்டெடுப்பதே மின் கட்டணத்தை அதிகரிப்பதன் நோக்கம் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமற்போனதால், மின் உற்பத்திக்கு மேலதிக செலவு ஏற்படும் என்றும் இந்த ஆண்டு 4500 கிகாவொட் நீர் மின் எதிர்பார்க்கப்படுவதாகவும் மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

மின்சார உற்பத்திக்காக செலவிடப்படும் தொகையை ஈடு செய்யும் வகையில் கட்டண திருத்தத்திற்கு அனுமதியளிக்குமாறு பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

.பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவானது இவ்வருடத்தில் மூன்றாவது தடவையாக மின்சார கட்டணத் திருத்தம் தொடர்பில் பொதுமக்களிடம் கருத்துகளை கேட்டறியும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதுடன், எதிர்வரும் 18 ஆம் திகதி வரை அவற்றை முன்வைக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனியிலிருந்து நாடு திரும்பினார்

ஜேர்மனிக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி தலைமையிலான இலங்கை தூதுக்குழுவினர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக ஞாயிற்றுக்கிழமை (01) நாட்டை வந்தடைந்தனர்.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் சென்ரா பெரேரா ஆகியோர் ஜனாதிபதியுடன் விஜயம் செய்திருந்தனர்.

ஜேர்மனியின் பேர்லின் நகரில் வியாழக்கிழமை (28) நடைபெற்ற "பேர்லின் குளோபல்" மாநாட்டின் முதல் நாளில் அரச தலைவர்களுக்கான கலந்துரையாடலில் ஜனாதிபதி உரையாற்றியிருந்தார்.

ஜேர்மன் சான்ஸலர் ஒலாப் ஸ்கொல்ஸ், பெல்ஜியம் பிரதமர் அலெக்சாண்டர் டீ குரூ, கசகஸ்தான், ஐரோப்பிய கவுன்ஸில் தலைவர் சார்ள்ஸ் மிஷெல் உள்ளிட்டவர்களுடன் பல நாடுகளின் தலைவர்கள், வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் உலகளாவிய ரீதியிலுள்ள பொருளாதார கொள்கை மற்றும் நிதிமயமாக்கல் நிபுணர்களும் கலந்து கொண்டனர்.

# சீரற்ற வானிலையால் 5,051 பேர் பாதிப்பு

நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 3 மாவட்டங்களில் 1,200 குடும்பங்களைச் சேர்ந்த 5,051 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடும் மழை மற்றும் பலத்த காற்று மற்றும் மண்சரிவு காரணமாக, 316 வீடுகள் சேதமடைந்துள்ளதாக நிலையத்தின் அண்மைய அறிக்கைகள் காட்டுகின்றன.

இதேவேளை, மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# தொடர்ந்து இரத்தாகும் ஸ்ரீலங்கன் விமானங்கள்

கடந்த சில நாட்களாக விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பல விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டதாக ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் தெரிவித்திருந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை (01) காலை நேபாளத்தின் காத்மாண்டு நோக்கி புறப்படவிருந்த விமானமும் தாமதமானது.

இதனால் சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட பயணிகள் விமான நிலையத்தில் சிரமத்திற்குள்ளாகினர்.

கடந்த வியாழக்கிழமை (28) இரண்டு விமானங்களும் வெள்ளிக்கிழமை (29) ஒரு விமானமும் இரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே காத்மண்டு நோக்கி காலை 8.20க்கு புறப்படவிருந்த விமானமும் மதியம் வரை தாமதிக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், மாற்று விமானமும் வழங்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

இதற்குப் பொறுப்பான அமைச்சரே பொறுப்புக் கூறுவார் என்றும் இந்த விமானத்தில் வேறு விமானங்கள் மூலம் நேபாளத்தில் உள்ள காத்மாண்டு சென்று பிற இடங்களுக்கு ஏராளமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் செல்ல இருந்ததாக இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி குறிப்பிட்டார்.

**" சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட பயணிகள் விமான நிலையத்தில் சிரமத்திற்குள்ளாகினர்**

இப்பிரச்சினை தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் திங்கட்கிழமை கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் திரு. நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# நந்திக்கடலில் வீழ்ந்த இளைஞன் உயிரிழப்பு

செ.கீதாஞ்சன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச எல்லைக்கு உட்பட்ட நந்திக்கடல் பகுதியில், மந்துவில் பகுதியினை சேர்ந்த 33 அகவையுடைய தர்மராசா நிசாந்தன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (01) அதிகாலை 5.30 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டு சென்ற நிலையில் நந்திக்கடல் கட்டந்தோனியால் கோவிலுக்கு முன்னால் உள்ள நந்திக்கடலில் நீரில் மூழ்கியநிலையில் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவரின் உயிரிழப்பு தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புதுக்குடியிருப்பு விபத்தில் இளைஞன் பலி

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோம்பாவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

7 ஆம் வட்டாரம் சிவநகர் புதுக்குடியிருப்பு பகுதியினை சேர்ந்த இளைஞன் பத்து இலட்சத்திற்கும் அதிகமான பெறுமதியைக் கொண்ட ரி.எம். மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனே இவ்வாறு உடலமாக மீட்கப்பட்டுள்ளர்.

28 அகவையுடைய கஜலன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் இவரது உடலம் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் வைக்கப்பட்டு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் பிரேத பரிசோதனையின் பின்னர் உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை (30) இரவு இடம்பெற்ற சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# விகாரை எதிர்ப்புக்கு தடையுத்தரவு

திருகோணமலை இலுப்பைக்குளத்தில் தடைசெய்யப்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுவரும் பௌத்த விகாரை ஒன்றின் கட்டுமானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஞாயிற்றுக்கிழமை (01) முன்னெடுக்கப்படவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை - நிலாவெளி காவல்துறையினால் பெறப்பட்ட நீதிமன்ற தடை உத்தரவின் போரில் குறித்த ஆர்ப்பாட்டமானது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இலுப்பைக்குளம் பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரையின் கட்டுமானப் பணிகளுக்கு மக்களால் எதிர்ப்பு தெரிவித்துவந்த நிலையில் குறித்த பகுதியில் கட்டுமானப் பணிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் கடந்த திங்கட்கிழமை (25) முதல் குறித்த பகுதியில் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## வெந்நீர் கொதிகலனில் தவறி விழுந்த இந்தியர் மரணம்

வெந்நீர் கொதிகலனில் தவறி விழுந்து இந்தியர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெலிப்பன்ன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிப்பன்ன- மீகம பிரதேசத்தில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த 34 வயதுடைய ராஜ்பாய் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் மீகம தர்கா நகரப் பகுதியில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றில், வேலை செய்து கொண்டிருந்த போது சுடுநீர் கொதிகலனுக்குள் விழுந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஐஸூடன் ஒருவர் கைது

மன்னார் - முருங்கன் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (01) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட சுற்றி வளைப்பின் போது 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான 178.75



கிராம் நிறை கொண்ட ஐஸ் போதைப்பொருளுடன் முருங்கன் பிட்டி பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இளம் மனைவி மாயம்: கணவன் முறைப்பாடு

தன்னுடைய மனைவியை காணவில்லை என கணவன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள சம்பவம் மொனராகலை புத்தல யுதஹாநாவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தன்னுடைய 19 வயதான மனைவி செப்டெம்பர் 19ஆம் திகதி முதல் காணவில்லை என குறித்த பெண்ணின் கணவனான 28 வயதான நபர், செப்டெம்பர் 28ஆம் திகதியன்று முறைப்பாடு செய்துள்ளார்.

வீட்டிலிருந்து வெளியே சென்று மாலையில் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, மனைவி வீட்டில் இருக்கவில்லை. அக்கம் பக்கத்து வீடுகளில் தேடி பார்த்தபோதும் அங்கும் அவர் இருக்கவில்லை என்று தன்னுடைய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.


தன்னுடைய மனைவி 19ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தாலும், வீட்டுக்குத் திரும்புவாள் என 28ஆம் திகதி வரையிலும் காத்திருந்ததாக அவர், தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

## யாழில் "காதலி" வாழை

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி கலந்துரையாடலில் "கதலி" வாழைக்கு பதிலாக "காதலி," வாழை என்று எழுத்தப்பட்டிருந்த வசனம் திரையில் தோன்றியது.

தவறுகள் விடுவது மனித இயல்பு ஆனால் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற உயர்மட்ட கலந்துரையாடலில் இவ்வாறான கருத்துப் பிழையான பொருள் கோடல்கள் இடம்பெறுவது பிரதம திட்டமிடல் கிளையினர் தாங்கள்




பெற்றுக்கொண்ட விடயங்களை உயர் கலந்துரையாடல் ஒன்றுக்கு சமர்ப்பிக்கும் போது திரும்ப மேற்பார்வை செய்யவில்லை என்பதே அர்த்தம்.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடல் கடந்த இரு மாதங்களாக கூட்டத்துக்கு திகதி இடப்பட்டும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கொழும்பு சந்திப்புக்களின் நிமித்தம் பிற் போடப்பட்டது.

அவ்வாறான நிலையிலும் கூட ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட விடயதானங்கள் கூட்டத் திகதிகள் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டிருந்த நிலையில் எழுத்துப் பிழைகள் அவதானிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வைத்தியசாலையில் தீ ஆராயுமாறு செந்தி பணிப்பு

திருகோணமலை- தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் ஞாயிற்றுக்கிழமை (01) காலை 6 மணிக்கு தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. வெளி நோயாளர் பிரிவு மற்றும் மருந்தகம் போன்ற பகுதிகளே இவ்வாறு தீப்பற்றி உள்ளது. வைத்தியசாலையில் நோயாளர்கள் எவருக்கும் பாதிப்பு இல்லை எனவும் தீப்பற்றியமைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை எனவும் தெரிவித்துள்ள தம்பலகாமம் பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர். குறித்த விபத்தில் வெளி நோயாளர் பிரிவு மற்றும் மருந்தகம் போன்ற பகுதிகள் தீப்பற்றி உள்ள நிலையில், சம்பவ இடத்திற்கு மாகாண சுகாதார



அமைச்சின் செயலாளர், மாகாண பணிப்பாளர் ஆகியோரை உடனடியாக சென்று களநிலவரங்களை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார். மேலும் தீ விபத்து தொடர்பான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு ஆளுநரால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

## பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக மீட்பு

■ எச்.எம்.எம்.பர்ஸான்

பொலன்னறுவை - வெலிகந்தை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் உத்தியோகஸ்தரான ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த ஹனீபா, சனிக்கிழமை (30) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது கடமையை முடித்துவிட்டு அதிகாலை 3 மணியளவில் பொலிஸ் நிலைய விடுதிக்குச் சென்றிருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது வலது கையின் மேற்பகுதியில் காயம் ஒன்று காணப்படுகின்றது. அதிலிருந்து கடுமையாக இரத்தம் வெளியாகியுள்ளமை



தெரியவந்துள்ளது.


அவரது சடலம், பிரேதப் பரிசோதனைக்காக பொலன்னறுவை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள துடன், தடவியல் பொலிஸ் பிரிவு மற்றும் வைத்திய அறிக்கையின் உதவியுடன் மரணத்துக்கான காரணத்தை கண்டறிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிவனொளிபாத மலைக்கு செல்ல தடை

பருவகாலம் இல்லாத காலப்பகுதியில் சிவனொளிபாத மலைக்கு அனுமதியின்றி செல்வது தடைசெய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார்.

பருவகாலம் இல்லாத காலப்பகுதியில் சிவனொளிபாத மலைக்கு அனுமதியின்றி சென்று வழிபடலாம் என அண்மைய நாட்களில் வெளியான செய்திகள் உண்மையல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2022-2023 சிவனொளிபாத மலை பருவகாலம் நிறைவடைந்துள்ள நிலையில், ஸ்ரீ பாதஸ்தானதிபதி சப்ரகமு மாகாண பிரதம சங்கநாயக பெங்கமுவே தம்மதின்னவின் பணிப்புரைக்கமைய அனுமதியின்றி ஹட்டன் வீதி மற்றும் இரத்தினபுரி



வீதி ஊடாகவும் சிவனொளிபாத மலைக்கு செல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

பருவகாலம் இல்லாத காலப்பகுதியில், சிவனொளிபாத மலைக்கு வருகை தரும்போது, உரிய நிறுவனங்களின் அனுமதியைப் பெற்று நல்லத்தண்ணி மற்றும் இரத்தினபுரி பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் சிவனொளிபாத மலை பகுதியில் இடையிடையே பலத்த மழை பெய்து வருவதாலும், அங்கு செல்லும் படிகளில் பாரிய நீரோடை ஓடுவதாலும் ஸ்ரீ சிவனொளிபாத மலைக்கு செல்வது ஆபத்தானது என நுவரெலியா மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மகளை கடத்தி மாதம் கடந்துவிட்டதாக பெற்றோர் முறைப்பாடு

■ யது பாஸ்கரன்

கிளிநொச்சி -பூநகரி பரமன் கிராய் பிரதேசத்தில் 15 வயதுடைய சிறுமி ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒரு மாதம் கடந்தும் பொலிஸார் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென கடத்தப்பட்ட சிறுமியின் பெற்றோர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி- பூநகரி பரமன்கிராய் பகுதியில் தரம் பத்தில் கல்வி கற்கும் 15 வயதுடைய சிறுமி ஒருவரை கடத்திச் சென்றுள்ளதாக அவரது பெற்றோர்களால் கடந்த ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், பொலிஸார் இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என பெற்றோர் கவலையடைந்துள்ளனர்.

இந்த நிலையில், சிறுமி கடத்தல் சம்பவம் தொடர்பில் 27 வயதுடைய இளைஞர் ஒருவர் தொடர்பில் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பில் இதுவரை எந்த விசாரணைகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் இது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்தில் புதன்கிழமை (27) முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் அதிகளவான சிறுவர் கடத்தல் சம்பவங்களும் பதிவாகி இருக்கின்ற போதும் இது தொடர்பில் பொலிஸார் எந்த விதத்திலும் நடவடிக்கையும் உடனடியாக எடுப்பதில்லை என பலரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

## இந்திய பிரஜை ஒருவர் நுாரளையில் மரணம்

■ ஆ.ரமேஸ்.

இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள ஷாதின் பரோடா பகுதியிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா பயணம் மேற்கொண்டு நுவரெலியாவுக்கு சென்றிருந்த 88 பேர் கொண்ட குழுவில் ஒருவர் மாரடைப்பினால் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இந்தியா குஜராத் மாநிலத்திலுள்ள ஷாதின் பரோடா பகுதியை சேர்ந்த ஷான் விஜயகுமார் ஜம்பக்லால் (வயது 67) என்பவர் என நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்திய குஜராத் மாநிலத்திலுள்ள ஷாதின் பரோடா பகுதியை சேர்ந்தவர் ஷான் விஜயகுமார் ஜம்பக்லால்.

அவருடைய மனைவி ஷான் ஜேத்தனா விஜயகுமார். இவ்விருவரும் 88 பேர் அடங்கிய குழுவாக செப்டெம்பர் 25ஆம் திகதி இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டு கொழும்புக்கு வந்துள்ளனர்.

பின்னர் கண்டிக்கு வருகை தந்தவர்கள், செப்டெம்பர் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை நுவரெலியாவுக்கு சென்று சுற்றுலா ஹோட்டலில் தங்கியிருந்துள்ளனர்.

இதன்போது ஷான் விஜயகுமார் ஜம்பக்லாலுக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது. உடனே அவரை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்த நிலையில், அவருக்கு அளித்த சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

ஷான் விஜயகுமார் ஜம்பக்லாலின் உடல் பிரேதப் பரிசோதணைக்கு உட்படுத்தப்பட்டபோது அவர் மாரடைப்பினால் உயிரிழந்ததாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் உயிரிழந்த ஷான் விஜயகுமார் ஜம்பக்லாலின் உடல் இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என அவரின் மனைவி விடுத்த கோரிக்கைக்கு அமைய உடலை அவரின் மனைவியிடம் (30.09.2023) அன்று ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சீதாவை சுட்டவர் சிக்கினார்

மஹியங்கனை ரஜமஹா விகாரையின் ரந்தோலி பெரஹெராவின் போது "சீதா" என்ற யானை மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்தை அடுத்து மாபாகட வெவ வனவிலங்கு பிராந்திய அலுவலகத்தில் சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


ஞாயிற்றுக்கிழமை (01) அதிகாலை 03.30 மணியளவில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். காட்டு யானை என நம்பி யானை தவறுதலாக சுடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மஹியங்கனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இதேவேளை, மஹியங்கனை ரஜமஹா விகாரையில் இடம்பெற்ற பெரஹரா ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக சென்ற மஹரகம சீதா யானை மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

47 வயதான சீதா யானை ஊர்வலத்தில் பங்கேற்ற பின்னர் விஹாரையின் மைதானத்தில் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த யானை மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான யானைக்கு சிகிச்சையளிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# ஜனநாயகத்தின் மூன்றாவது தூணுக்கு கைச்சுத்தியால் விழுந்த அடி

இனங்கள், மதங்களைச் சார்ந்த வழக்குகளை கையாள, கட்டளைகளைப் பிறப்பிக்க, தனித்திறமையும் தைரியமும் அவசியம். அவ்வாறானவர்களில் ஒருவர்தான் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா, அவருக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலால் தனது பதவியை தூக்கியெறிந்துவிட்டு, நாட்டை விட்டு தப்பிச் சென்றுவிட்டார்.

புத்தசா சன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, குருந்தூர் மலையில் புத்தர் சிலையொன்றை வைத்து வணங்கிவிட்டு, அவ்விடத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு அனுமதி கொடுத்தார். அதற்குப் பின்னரே இரு இனங்களுக்கு இடையில் கனன்று கொண்டிருக்கும் விவகாரமாக குருந்தூர் மலை மாறியது. தற்போது, குருந்தி என்றும் அழைக்கின்றனர்.

குருந்தூர் மலையில் அகழ்வாராச்சி எனும் போர்வையில் விஹாரை கட்டப்படுவதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நிர்மாணத்துக்கு இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்த நீதிபதி சரவணராஜா, களவிஜயம் மேற்கொண்டிருந்தார். அங்கு சென்றிருந்த சரத் வீரசேகர எம்.பி, கருத்துரைக்க முற்பட்ட வேளையில் அதற்கு இடம்கொடுக்கவில்லை.

அங்கிருந்து வெளியேறி கருத்துரைத்த சரத் வீரசேகர தமிழ் நீதிவான்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாதென கொந்தளித்தார். தன்னுடைய சிறப்புரிமையை பயன்படுத்தி, பாராளுமன்றத்தில் இனவாதத்தை கக்கி கொந்தளித்தார்.

அதுமட்டுமன்றி, நீதிபதி சரவணராஜாவை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாகவும், அதில் பிரசன்னமாகுமாறு கோரவே, சட்டமா அதிபர் நீதிபதியை அழைத்ததாகவும், அங்கு வைத்தே, குருந்தூர் மலை விவகாரத்துக்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவை மீள பெறுமாறு வலியுறுத்தியதாகவும் அறியமுடிகின்றது.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களான சட்டமன்றம், நிர்வாகி, நீதித்துறை மற்றும் ஊடகங்கள் ஆகியவற்றில் மூன்றாவது தூணுக்கு கைச்சுத்தியால் அங்கு வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நீதி என்பதற்கு அப்பால் இனத்துக்கும், இனவாதத்தை கக்குவோருக்கும் திருப்தியளிக்கப்பட்டுள்ளது.

தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தாக கூறும் நீதிபதி சரவணராஜா, பொலிஸ் நிலையத்திலோ பாதுகாப்பு அமைச்சிலோ முறைப்பாடு செய்யவில்லையென, அரசாங்கத்தரப்பினர் சாக்குபோக்கான வாதங்களை முன்வைக்கக்கூடும்.

தான் வழங்கிய கட்டளையை மாற்றியமைக்க முடியாதென நிமிர்ந்து நின்றுகூறியிருக்கும் அவர், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்கு முதுகெலும்பு இல்லாதவர் அல்லர். எனினும், அவருக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடாதென தடையுத்தரவு பிறப்பித்துவிட்டால், அவருடைய உயிருக்கு உத்தரவாதமளிப்பது யார்? ஏனெனில், குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் கட்டளைக்குப் பின்னர், அவருடைய பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது.

நீதிபதி சரவணராஜா தன்னுயிரைக் காப்பாற்றுவதற்கு சாணக்கியமாக செயற்பட்டுள்ளார். எனினும், நீதித்துறையின் மீது கரும்புள்ளி குத்தப்பட்டுவிட்டது. அதை அழிப்பது கடினமாகும் என்பதை வலியுறுத்துகின்றோம். சகலருக்கும் சமமானதாக நீதி இருக்காத வரையிலும் அவநம்பிக்கையே எஞ்சும்




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல்



என்.கே. அஷோக்பரன்

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா திடீரென்று தனது பதவியை இராஜினாமச் செய்தது இலங்கையில் நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பான கேள்விகள் மீண்டும் எழுப்பப்படுவதற்கு காரணமாக அமைந்திருக்கிறது. 23.09.2023 திகதியிடப்பட்ட, நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட தனது பதவிவிலகல் கடிதத்தில், நீதிபதி சரவணராஜா, தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாலும், அதிக அழுத்தத்திற்கு உள்ளாகியிருப்பதாலும் தனது பதவியை இராஜினாமாச் செய்வதாகவும், குறிப்பிட்டிருக்கிறார்.

நீதிபதி சரவணராஜாவின் திடீர் பதவிவிலகலின் முன்னர், அவர் குருந்தூர்மலை வழக்கை விசாரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வழக்கானது தேசியளவில் பேசப்பட்ட வழக்காக மாறியிருக்கிறது, அல்லது மாற்றப்பட்டிருக்கிறது எனலாம். குருந்தூர்மலை விவகாரம் சிக்கலானதொன்று. அது தனித்து ஆராயப்பட வேண்டியதொன்று. குருந்தூர்மலை (சிங்களத்தில் குருந்தி) விவகாரம் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் மற்றும் மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜாவால் விசாரிக்கப்பட்டு வந்தது. இனவாத அரசியல் மேவி நின்ற இந்த வழக்கில், நீதிபதி ரீ.சரவணராஜா மீது அரசியல் ரீதியிலான விமர்சனங்கள், குறிப்பாக தென்னிலங்கையின் பேரினவாத அரசியல்வாதிகளினால் முன்வைக்கப்பட்டமை கவலைக்குரியது. நீதிமன்ற அவமதிப்பிலிருந்து தப்பிக்க தனது பாராளுமன்ற வரப்பிரசாதத்தைப் பயன்படுத்தி, நீதிபதி ரீ.சரவணராஜா மீதான கடுமையான விமர்சனத்தை பேரினவாதியான முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்தார். ஜூலை 9ம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய சரத் வீரசேகர, “குருந்தூர்மலையிலிருந்து (யாழ்ப்பாணத்தில்) எங்களை வெளியேற்றிய முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் நடவடிக்கை ஏற்றுக்கொள்ள முடியாதது. தொல்லியல் ஆய்வு செய்ய அவருக்கு அதிகாரம் இல்லை. இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை நீதிபதி புரிந்து கொள்ள வேண்டும்” என்று பேசியிருந்தார்.

இந்தப் பேச்சை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாகக் கண்டித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து, ஜூலை 14ம் திகதி குருந்தூர்மலை ஆதி ஐயனார் கோவிலில் பொங்கலை நிகழ்வு நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில், அது திட்டமிட்ட வகையில் அங்கு வந்த பேரினவாதிகளால் குழப்பப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவை மீறி, ஒரு தரப்பினரால் குருந்தூர்மலையில் புத்தர் சிலை நிறுவப்பட்டது. தொடாந்து ஒகஸ்ட் 15ம் திகதி, குருந்தூர்மலையை அண்டிய மக்கள் ஆதி ஐயனார் கோவிலில் பொங்கல் வழிபாடு செய்வதற்கு தடை கோரி பொலிஸார் தாக்கல் செய்த மனுவை, நீதிமன்றம் நிராகரித்திருந்தது. தற்போதுள்ள தொல்லியல் சின்னங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் பொங்கல் வைத்து வழிபாடு நடத்த அப்பகுதி மக்களுக்கு உரிமை உண்டு என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. ஒகஸ்ட் 18 நடந்த பொங்கல் வழிபாட்டைக் குழப்பும் முயற்சிகள் இடம்பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து, ஒகஸ்ட் 20 அளவில், முல்லைத்தீவு நீதவான் ரீ.சரவணராஜாவுக்கு எதிராக இலங்கை நீதிச்சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்று செய்யப்பட்டது. பேரினவாத பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தலைமையிலான ஜாதிக நிதஹஸ் பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜயந்த சமரவீர, “ஒகஸ்ட் 18ஆம் திகதி குருந்தூர்மலையில் இந்து சமய வழிபாடுகள் இட்பெற்றுள்ளன. முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சரவணராஜா ஒருதலைப்பட்சமாகவும் பொறுப்பற்றவராகவும் செயற்படுகின்றார். மறுபுறம், தொல்பொருள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களை அவர் கவனிக்கவில்லை” என்று தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளதாக அறியக்கிடைக்கிறது. இந்த நிலையில் ஒகஸ்ட் 22ல், பேரினவாதி சரத் வீரசேகர, மீண்டும் தனது பாராளுமன்ற வரப்பிரசாதத்திற்குள் ஒளிந்தகொண்டு, நீதிபதி சரவணராஜா மீது பாராதூரமான தாக்குதலை தனது பாராளுமன்ற பேச்சில் நடத்தினார். “முல்லைத்தீவு நீதவான் மனநலம் குன்றியவர். அவருக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். நீதி அமைச்சும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவும் இதனை ஆராய்ந்து வேறு ஒருவரை நீதிபதியாக நியமிக்க வேண்டும்” என்று பகிரங்கமாகவே பாராளுமன்றத்தில் ஒரு நீதிபதியை சரத் வீரசேகர மிக மோசமான முறையில் விமர்சித்தார்.

இந்தப் பின்னணியில்தான் நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகலை நாம் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. நீதிபதி சரவணராஜாவின் பதவிவிலகலைத் தொடர்ந்து, சமூக ஊடகங்களில் சில ஊடகவியலாளர்களின் பதவிவுகளில், நீதிபதி சரவணராஜா பதவிவிலகிவிட்டு நாட்டைவிட்டு வெளியேறிவிட்டதாகவும், சரத் வீரசேகர உள்ளிட்ட பெரும்பான்மையினத்தவரால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும், தனக்கான பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டதாகவும், புலனாய்வுத்துறை தன்னை கண்காணிப்பது தொடர்வதாகவும், சட்டமா அதிபர் தன்னை சட்டமா அதிபரின் அலுவலகத்திற்கு 21.09.2023 அன்று வருமாறு அழைப்புவிடுத்து, அந்த சந்திப்பின் போது, குருந்தூர்மலை வழக்கில் தனது ஆணைகளை மாற்றியமைக்க அழுத்தம் தந்ததாகவும், தனக்கெதிராக இரண்டு வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டிருப்பதாகவும் ஊடகங்களுக்கு தெரிவித்ததாக குறிப்பிடுகிறார்கள். நீதிபதி சரவணராஜாவிடமிருந்த உத்தியோகபூர்வமாக இந்த விடயங்கள் அறிவிக்கப்படாதவரை, இந்த சமூக ஊடகவியலாளர்களின் பதிவுகள் ஐயத்துடனேயே அணுகப்பட வேண்டியவையாகின்றன.

நீதிமன்றையும், நீதிபதிகளையும் தனது பாராளுமன்ற வரப்பிரசாதத்திற்குள் ஒளிந்துக்கொண்டு தாக்கும் சரத் வீரசேகரவின் ஈனச்செயலை ஆளும் அரசாங்கம் கண்டித்திருக்க வேண்டும். சபாநாயகர் அதனைத் தடுத்திருக்க வேண்டும். அவரது பதவிவிலகலுக்கான கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். இதெல்லாம் நடக்குமளவிற்கு அரசியல் நாகரீகமடைந்த நாடாக இலங்கை இன்னும் வளரவில்லை. பேரினாவதமும், காட்டுமிராண்டித்தனமும் நிறைந்த நாடாகத்தான் இலங்கை இருக்கிறது என்பதற்கு, சரத் வீரசேகர போன்ற அப்பட்டமான பேரினவாதி, தலைநகரில் அதிகூடிய விருப்பு வாக்குகள் பெற்று பாராளுமன்றத்திற்கு சென்றமையே பெரும் எடுத்துக்காட்டு. கொழும்பு என்பது பெரும்பாலும் நாகரீகமடைந்த, தாராளவாத தன்மைகள் நிறைந்த இடம் என்ற மாயத்தோற்றம் பலருக்கும் இருக்கலாம். அது அப்படியில்லை என்பதற்கு பெரும் எடுத்துக்காட்டுக்கள் இந்நாட்டின் மிகப்பெரிய பேரினவாதிகளான சரத் வீரசேகர, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்கள் எல்லாம் கொழும்பையே பிரதிநிதித்துவம் செய்கிறார்கள்!

ஒரு நீதிபதி பேரினவாதத்திற்குப் பயந்து பதவியைத் துறந்துவிட்டு நாட்டைவிட்டு ஓட வேண்டுமென்றால், இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடக்கிறதா? அல்லது பேரினவாதிகளின் காட்டாட்சி நடக்கிறதா? என்ற கேள்வி எழுவது நியாயமானதே. நிற்க.

மறுபுறத்தில், மேற்சொன்ன சமூக ஊடகவியலாளர்களின் பதிவு உண்மையென்றால். அதில் சில சிக்கலான கேள்விகள் எழுகின்றன. ஒரு நீதிபதி, ஏன் சட்டமா அதிபரை சென்று சட்டமா அதிபரின் அலுவலகத்தில் சந்திக்க வேண்டும்? சரி, தனக்கெதிரான வழக்கில் தன் சார்பாக சட்டமா அதிபர் வழக்காடுகிறார் என்பதன் நிமித்தம் சந்திக்கச் சென்றிருந்தால், அதைத்தாண்டி தான் விசாரிக்கும் வழக்குகளைப் பற்றி பேசுவதைத் தவிர்த்திருக்கலாமே? சட்டமா அதிபரே அதைப்பற்றி பேச முயன்றிருந்தாலும், இல்லை நான் விசாரித்துக்கொண்டிருக்கும் வழக்குகள் பற்றி பேசுவது முறையல்ல என்ற தவிர்த்திருக்க வேண்டும். சட்டமா அதிபர் அச்சுறுத்தல் விடுத்திருந்தால், அதைப்பற்றி நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கும், உயர்நீதிமன்றத்திற்கும் அறிவித்திருக்க வேண்டும். உயிர் அச்சுறுத்தல் இருந்தால், அது பற்றி பொலிஸிற்கும், நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கும், உயர்நீதிமன்றத்திற்கும் முறைப்பாடு செய்திருக்க வேண்டும். இதுதானே நடைமுறை? நீதிபதி சரவணராஜா இதைக்கூட ஏன் செய்யவில்லை என்ற கேள்வி நிச்சயம் பலராலும் எழுப்பப்படும். இவற்றையெல்லாம் செய்யாமல், அவர் பதவி விலகிவிட்டு நாட்டை விட்டு வெளியேறியது உண்மையென்றால், வெளிநாட்டில் தஞ்சம் கோருவதற்காகத்தான் அவர் இதனைச் செய்தார் என்ற பிரச்சாரத்தை அவர் எதிர்கொள்ள வேண்டிவருவது தவிர்க்க முடியாததாகும். இது துரதிஷ்டவசமானது.

இலங்கை அதன் வரலாற்றில் ஒரு முக்கியமான சந்தியில் நிற்கிறது. நாட்டின் கடந்த காலம் இன மற்றும் மத பதட்டங்களால் சிதைக்கப்பட்டது. பெரும்பான்மையினர் சிறுபான்மை சமூகங்களின் மீது அதிகாரத்தையும் செல்வாக்கையும் செலுத்தி, தமது நலன்களை முன்னிறுத்துகின்றனர். இந்த ஏற்றத்தாழ்வானது, பாகுபாடு, ஓரங்கட்டப்படுதல் மற்றும் வன்முறையின் சுழற்சிக்கு வழிவகுத்தது. சமூக நல்லிணக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை தொடர்ந்து தடுத்து வருகிறது. உண்மையிலேயே முன்னேற்றம் அடையவும், செழிப்பைத் தழுவவும், பெரும்பான்மையின மேலாதிக்கம் என்பது இல்லாது அமைய வேண்டும். ஒரு நாட்டின் பலம் அதன் பன்முகத்தன்மையில் உள்ளது, இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. அனைத்து இன மற்றும் மத குழுக்களுக்கும் சம உரிமைகள், வாய்ப்புகள் மற்றும் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதன் மூலம், இலங்கை தனது மக்களின் கூட்டு ஆற்றலைப் பயன்படுத்தி, புதுமை, ஒத்துழைப்பு மற்றும் நிலையான வளர்ச்சியை வளர்க்க முடியும். உள்ளடக்கம் மற்றும் ஒற்றுமையைத் தழுவுவது கடந்த காலத்தின் காயங்களை ஆற்றுவது மட்டுமல்லாமல், பிரகாசமான மற்றும் மிகவும் இணக்கமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும். அதைவிடுத்து வேதாளம் மீண்டும் முருங்கைமரம் ஏறினால், இலங்கைக்கு முக்தியில்லை.



## வாழ்வியல் தரிசனம்

தான் வாழும் சமூகத்துக்கு எந்த நன்மைகளும் செய்யாமல், பிறருக்கு வேண்டுமென்றே தீமைகளைச் செய்பவர்கள், கடவுளிடம் வரம் கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது.

வெளியில் உத்தமராகக் காட்டுபவர்கள், தாம் செய்யும் செயல்கள் மக்களுக்குத் தெரியாது என தப்புக்கணக்கு போடுகின்றார்கள். இத்தகையோர் அடையும் தருப்திதான் என்ன?

எவருக்காவது நன்மைகள் செய்யும்போது, ஏற்படும் திருப்தி அலாதியானது பொது நலத்தொண்டுகளில் இளைஞதலை முறையினர் ஈடுபடுவது மகிழ்ச்சியானது.

தெருவோரத்தில் கண்டெடுத்த பணப்பையை, உரியவரிடம் கையளிக்கும் நிகழ்வுகளை தினமும் பத்திரிகைகளில், படித்திருக்கின்றோம்

ஒருவருக்கு உதவுவது எமது இதயத்தை குளிரவைக்கும் செயலாகும். புற அழகை விட, அக அழகே பெரிது. மக்களை நேசிக்கும்போது, யாவரும் எம்மவர்கள் என்ற எண்ணங்கள் உருவாகின்றன.

உலக மக்கள் துன்பங்களைக் கண்டு திரும்பிப் பார்க்காமல் செல்வது மானிட தர்மம் இல்லை. இரக்கம் இல்லாமல் வாழ்பவன், நிம்மதியாக வாழ முடியாது. அன்பே அறம்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### திரும்ப முடியாது பயணிகள் அவதி



வார இறுதி விடுமுறைக்காக தங்களுடைய சொந்த இடங்களுக்கு திரும்பியவர்கள் பணியிடங்களுக்கு மீண்டும் அழைத்துச் செல்ல பேருந்துகள் போதியளவு இல்லாததால் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

வார இறுதி விடுமுறைக்காக கொழும்பு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பணிபுரிந்து திரும்பியோர் பணியிடங்களுக்குச் செல்வதற்கு போதியளவில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் மற்றும் தனியார் பேருந்துகள் இல்லாததால் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

ஹட்டனிலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. ஹட்டன் பேருந்து நிலையத்தில் தற்போது புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. பேருந்து நிலையத்திலிருந்து நீண்ட தூர சேவைப் பேருந்துகள் ஹட்டன் நகர மையத்தில் இருந்து பயணிக்கத் தொடங்கும்.

மோசமான வானிலை காரணமாக பேருந்துகள் வந்து சேரும் வரை காத்திருந்த முறையான இடமொன்று இல்லை. இதனால், பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

ஹட்டன் டிப்போவினால் ஹட்டனில் இருந்து கொழும்புக்கு பல பஸ்கள் இயக்கப்பட்டுள்ளன. எனினும், பஸ்கள் போதுமானதாக இல்லை என பயணிகள் தெரிவித்தனர்.

ரஞ்சித் ராஜபக்ஷ

AUTOMOBILE.LK

SLT டிஜிட்டல் சேர்விஸ் இனால்

# "Automobile.LK" அறிமுகம்

SLT டிஜிட்டல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தினால், ஒன்லைன் டிஜிட்டல் விவரக் கோவையான Automobile.LK அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வாகனங்களுடன் தொடர்புடைய சகல அம்சங்களுக்கும் பரிபூரண உள்ளம்சங்களை வழங்குவதாக இந்த டிஜிட்டல் கட்டமைப்பு அமைந்துள்ளது.

வாகனங்கள் தொடர்பான சகல தேவைகளையும் நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய உள்ளடக்கமான வாகன இணையத்தள கட்டமைப்பாக Automobile.LK திகழ்கின்றது. பிந்திய தகவல்களை வழங்குவதற்கு மேலதிகமாக, வாகன சேவைகள் மற்றும் தொழிற்துறை விநியோகத்தர்கள் அடங்கலாக பரிபூரண உள்ளம்சங்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதுடன், மையப்படுத்தப்பட்ட பகுதியாகவும் இந்த போர்டல் அமைந்துள்ளது.

ஒன்லைன் விவரக் கோவையான Automobile.LK, வாகன வர்த்தகங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த சாதனமாக அமைந்துள்ளது. குறிப்பாக ஒன்லைன் கட்டமைப்பில் தமது பிரசன்னத்தை உறுதி செய்து, விளம்பரப்படுத்திக் கொள்ள உதவியாக அமைந்திருக்கும். வாகன வியாபாரங்களுக்கு தமது தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வெளிப்படுத்துவதற்கு அவசியமான Search Engine Optimization (SEO) வசதிகளைக் கொண்டிருப்பதுடன், தேடல் பெறுபேறுகளின் அடிப்படையில் சர்வதேச பார்வையாளர்களை கவர்ந்திழுக்கும் திறனையும் கொண்டிருக்கும்.

டிஜிட்டல் சேர்விசஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி உபுல் மஞ்சநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் வாகனங்கள் தொழிற்துறையில் புரட்சிகரமான படியாக Automobile.LK அமைந்துள்ளது. டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் சக்தியை கையகப்படுத்தி, வாகனங்கள் தொடர்பான முக்கியமான தகவல்களை அணுகும் வசதியை ஏற்படுத்தும் கட்டமைப்பை நாம் ஏற்படுத்தியுள்ளதுடன், நுகர்வோர் மற்றும் வியாபாரங்களுக்கிடையே அர்த்தமுள்ள தொடர்புகளை ஏற்படுத்தவும் முன்வந்துள்ளோம்." என்றார்.

SLT டிஜிட்டல் சேர்விசஸ், இலங்கையின் வாகனங்கள் துறையை டிஜிட்டல் மயப்படுத்தும் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தியுள்ளதுடன், Automobile.LK இனால் செல்வாக்குச் செலுத்துவதில் முக்கிய பங்காற்றப்படும். மேம்படுத்தப்பட்ட தொழிற்துறை கைகோர்ப்பு மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாடு ஆகியவற்றின் திறவுகோலாகவும் இந்தப் புத்தாக்கம் அமைந்துள்ளது.

செலான் கிரடிட் கார்ட்ஸ்

## இலகுக் கொடுப்பனவுத் திட்டங்கள் அறிமுகம்

செலான் கார்ட்ஸ், அனைத்து பாடசாலைக் கட்டணக் கொடுப்பனவுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட புத்தகசாலைக் கொள்வனவுகளுக்கு 3 மாத 0% வட்டிவீதத்தில் இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது.

இந்த புதிய சலுகையுடன், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களின் பொருளாதாரச் சுமையை தளர்த்துவதற்கு செலான் கார்ட்ஸ் முயற்சிப்பதோடு, ஒவ்வொரு பிள்ளையும் தரமான கல்வியைப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்கிறது. இந்த 0% வட்டிவீத இலகுக் கொடுப்பனவுத் திட்டங்கள், தமது செலவுகளை குடும்பங்கள் சிறப்பாகக் கையாளுவதற்கு ஊக்குவிக்கும் அதேவேளை மாணவர்களின் கல்விசார் வெற்றிகளுக்கு அவசியமான கருவிகளைப் பெற்றுத்தரும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

செலான் வங்கியின் வாடிக்கையாளர் வங்கிச்சேவை பிரதி பொது முகாமையாளர் யூஜின் செனவிரத்ன குறிப்பிடும்போது, எதனையும் முற்றிலும் மாற்றியமைக்கும் கல்வியின் ஆற்றல் மற்றும் பிள்ளையொன்றின் எதிர்காலத்தை உருவாக்குவதில் அதன் இன்றியமையாத தாக்கத்தின் மீது செலான் கார்ட்ஸ் மனப்பூர்வமான நம்பிக்கை கொண்டுள்ளது. வெறுமனே ஒரு நிதித்தீர்வாக மட்டுமன்றி, ஒவ்வொரு பிள்ளையின்; கனவுகளுக்குமான எமது மெய்யான அர்ப்பணிப்பின் ஓர் உருவகமாக இந்த 0% வட்டி இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களை அறிமுகம் செய்வதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம் என்று தெரிவித்தார்.



கொள்வனவுகளை இலகுக் கொடுப்பனவுத் திட்டமாக மாற்றிக்கொள்ள, கார்ட் உரிமையாளர்கள் வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

செலான் கார்ட்ஸின் இலகு கொடுப்பனவுத் திட்டங்களில் உள்ளூர் அரசாங்கப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், மற்றும் சர்வதேசப் பாடசாலைகள் உட்பட பரந்த அளவிலான கல்வி நிறுவகங்கள் உள்ளடங்குகின்றன. அதற்கு மேலதிகமாக இத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட புத்தகசாலைகளின் கொள்வனவுகளுக்கும் நீட்டிக்கப்பட்டிருப்பதால், மாணவர்கள் அத்தியாவசிய கல்விசார் உபகரணங்களை சௌகரியமாக பெற்றுக்கொள்ள முடியும்.

ஒரு பிள்ளையின் மெய்யான சாத்தியங்களை திறந்து வைப்பதற்கு உறுதி பூண்டுள்ள ஒரு வர்த்தகநாமம் என்ற வகையில், வாடிக்கையாளர்களின் மனம் விரும்பும் அவசியத் தேவைகளுக்கு தன்னிகரற்ற சேவைகளை வழங்குவதில் செலான் கார்ட்ஸ் என்றும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. இந்த இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களை வழங்குவதன் ஊடாக, இளையோரை ஊக்குவித்து சவால்களுக்கு மத்தியிலும் அவர்களது கல்விப் பயணத்திற்கு துணை நிற்கும் தனது நிலைப்பாட்டை செலான் கார்ட்ஸ் மீளுறுதி செய்கிறது.

## கொமர்ஷல் வங்கியும் பிரவுண்ஸ் நிறுவனமும் கைகோர்ப்பு



பிரவுண்ஸ் நிறுவனத்தின் விவசாயப் பிரிவோடு புதியதோர் லீசிங் திட்டத்தில் இணைந்துள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது. நாட்டின் விவசாய சமூகத்துக்கு வலுவூட்டும் வகையில் அவர்கள் அதி நவீன தொழில்நுட்பத்தையும் உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளத்தக்கதாகவும் விவசாயிகளின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும் இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

2023 இறுதி வரை இந்த ஊக்குவிப்பு காலம் அமுலில் இருக்கும். TAFE வகை டிரக்டர்கள், Sumo மற்றும் Yanmar ரக அறுவடை இயந்திரங்கள் பிரவுன்ஸ் நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு, பராமரிப்பு சேவைகளும் பிரவுண்ஸ் விவசாயப் பிரிவால் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த கொமர்ஷல் வங்கி லீசிங் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் லீசிங் வசதிகளின் கீழ் இவற்றைக் கொள்வனவு செய்யும் போது வழமையான வட்டி வீதத்தில் இருந்து ஒரு வீத கழிவு வழங்கப்படும். மோட்டார் வாகன பதிவுத் திணைக்களத்தின் பதிவுகளை அல்லது ஏனைய அரசு நிறுவனங்களின் கீழான பதிவுகளை பிரவுண்ஸ் நிறுவனம் இலவசமாகக் கையாளும் என வங்கி அறிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக பிரவுண்ஸ் விவசாய பிரிவு TAFE டிரக்டர் வகைகளின் தெரிவு செய்யப்பட்ட உற்பத்திகளுக்காக முதல் வருடத்துக்கான இலவச காப்புறுதியையும் பிரவுண்ஸ் விவசாயப் பிரிவு வழங்கும். அத்தோடு கொள்வனவு செய்யப்படும் சகல வகை டிரக்டர்களுக்கும் கட்டணங்கள் அற்ற நான்கு இலவச பராமரிப்பு சேவைகளும் வழங்கப்படும்.

அதேவேளை இந்த லீசிங் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் Yanmar மற்றும் Sumo அறுவடை இயந்திரங்களுக்கு முறையே மூன்று மற்றும் இரண்டு இலவச சேவைகளும் வழங்கப்படும்.

இந்த ஊக்குவிப்பின் குறிக்கோள்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் கொமர்ஷல் வங்கி கவர்ச்சி மிக்க விஷேட வீதங்களில் வழமையான லீசிங் பொதிகளையும் வழங்கும். அதேபோல் வங்கியின் 'கண்ண வாரிகா' (பருவ கால கட்டணம்) தெரிவும் வாடிக்கையாளர்களின் வருமான வசதிக்கு ஏற்ப வழங்கப்படும். இதன் கீழ் லீசிங் கட்டணம் அறுவடை பருவத்தின் போது மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும்.




## தமிழ் மொழித் தினப் போட்டிகள்

மத்திய மாகாண தமிழ் மொழித் தினப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வு, கம்பளை சாகிராக் கல்லூரியில் சனிக்கிழமை (30) இடம்பெற்றதுடன் மத்திய மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் அருந்ததி கலந்து சிறப்பித்தார்.

மெய்யன்




## கிளையின் நிர்வாகத் தெரிவு

இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக் கிளையின் நிர்வாக தெரிவு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி அலுவலகத்தில் சனிக்கிழமை (30) இடம்பெற்றது.
கிளையின் தலைவராக பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ச.ஜெயந்தன், தொகுதிக்கிளை செயலாளராக பற்றிக் தனுஷ், உப செயலாளராக வண்ணக்குமார் விமலாம்பிகை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பு.கஜிந்தன்




## கைப்பணி கண்காட்சி

ஒக்டோபர் முதலாம் திகதி, சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினமாகும். இதனைமுன்னிட்டு காத்தான்குடி பிஸ்மி கல்வி நிறுவனம் ஏற்பாடு செய்திருக்கும், மாணவர்களின் கைப்பணி கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை (01) காலை உத்தியோபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ரீ.எல். ஜவ்பர்கான்






## வேர்களைத் தேடி

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள காத்தான்குடி மெத்தைப் பள்ளி வித்தியாலயத்தின் பழைய மாணவர்களின் "வேர்களைத் தேடி" எனும் மகுடத்தின் கீழான ஒன்று கூடல் ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்றது.

பாடசாலை நிர்வாகம், பாடசாலை பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த ஒன்று கூடலில் பேரணியும் இடம்பெற்றது.
குறித்த பேரணி காத்தான்குடி பிரதான வீதி ஆறாம் குறிச்சி மீராபாலிகா பாடசாலை முன்பாக ஆரம்பமாகி மெத்தைப் பள்ளி வித்தியாலயம் வரை சென்று அங்கு முடிவடைந்தது.

இந்த நிகழ்வில் பழைய மாணபவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் பாடசாலையின் தேவைகள் குறித்த தொகுப்பும் இதன்போது முன் வைக்கப்பட்டது.

எம்.எஸ்.எம்.நூர்தீன்




## நாய்களுக்கு தடுப்பூசி

செப்டெம்பர் 28ஆம் திகதி, உலக நீர் வெறுப்பு நோய் தினமாகும். இதனை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் தொற்று நோய் பிரிவு மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் இணைந்து நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களிலும் நாய்களுக்கு தடுப்பூசி ஞாயிற்றுக்கிழமை (01) ஏற்றப்பட்டது.

நூருல் ஹுதா உமர்






## புதிய ஜேர்ஸிகள் வழங்கி வைப்பு

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் கலாநிதி ஏ.எம்.ஏ.அஸீஸ் உதைப்பந்தாட்ட போட்டி தொடரில் பங்கேற்ற புத்தளம் வை.எம்.எம்.ஏ. கிளை சார்பான வீரர்களுக்கு புதிய ஜேர்ஸிகள் வழங்கி வைக்கப்பட்டன.
புத்தளம் சீ.பீ.எஸ். பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகரும், அமேசன் உயர் கல்வி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கலாநிதி இல்ஹாம் மரைக்கார் ஜேர்ஸிகளை வழங்கி வைத்தார்.

எம்.யூ.எம்.சனூன்



## மீலாத் விழா

கண்மணி நாயகம் (ஸல்) அவர்களின் புனித பிறந்த தின மீலாத்தை முன்னிட்டு புத்தளம் கல்பிட்டி (பெரியசந்தி கிராமம்) அல் மத்ரஸதுல் ஹத்தாகியா மற்றும் ஹிழ்ர் மகாம் அமைப்பின் குர்ஆன் மற்றும் ஹிப்ழ் மாணவர்களின் இஸ்லாமிய பாரம்பரிய கலை மற்றும் கலாசார நிகழ்வுகள் சனிக்கிழமை (30) இடம்பெற்றன.

நூருல் ஹுதா உமர்




## சிறுவர் போட்டியில் லீடர் அஷ்ரப் முதலிடம்

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற சிறுவர்களுக்கான வலயமட்ட KIDS ATHLETICS – 2023 விளையாட்டுப் போட்டிகளில் சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் பாடசாலையின் சார்பாக கலந்து கொண்ட தரம் 3 மற்றும் தரம் 4ஐ சேர்ந்த ஆண், பெண் கலப்பு அணிகள் இரண்டும் முதலாம் இடங்களைப்பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

எம்.எஸ்.எம்.ஸாகிர்

உத்தரபிரதேசம்

மகளின் திருமணத்துக்கு

# சேமித்த பணத்தை அரித்த கரையான்



தன்னுடைய மகளின் திருமணத்துக்காக சேகரித்து தனியார் வங்கியொன்றின் சேமிப்பு பெட்டகத்தில் (லொக்கர்) சேமித்து வைத்திருந்த 18 இலட்சம் ரூபாவை, கரையான்கள் அரித்த சம்பவமொன்று உத்தரபிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது,

உத்தர பிரதேசத்தில் மொராதாபாத் மாவட்டத்தைச் சேர்ந்த அல்கா பதக் என்ற பெண், 2022 ஒக்டோபரில் சேமித்து வைத்த பணத்தையே கரையான்கள் அரித்துள்ளது.

சேமிப்பு பெட்டக ஒப்பந்தத்தை புதுப்பிக்க அல்கா பதக்கை வங்கி ஊழியர்கள் அழைத்தனர். இதன்படி வங்கிக்கு சென்ற அவர் தனது லொக்கரை திறந்து பார்த்துள்ளார்.

அதில் வைக்கப்பட்டிருந்த 18 இலட்சம் ரூபாய் ரொக்கம் கரையான்களால் அரிக்கப்பட்டதை பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளார். இதுகுறித்து வங்கி ஊழியர்களிடம், புகார் அளித்துள்ளார். இந்த சம்பவம் குறித்து வங்கி தலைமை அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்பி உள்ளோம். பதிலுக்காக காத்திருக்கிறோம் என வங்கி ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். இதனிடையே தனியார் வங்கியின் சேமிப்பு பெட்டக ஒப்பந்தத்திலும், நகைகள், ஆவணங்கள் தவிர, ரூபாய் நோட்டுகளை வைக்கக்கூடாது என்றும் திருட்டு, கொள்ளை, தீ விபத்து போன்ற சம்பவங்களால் இழக்கும் பொருட்களுக்கு மட்டுமே வங்கி பொறுப்பு என்றும் குறிப்பிட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

உத்தர பிரதேசம்

## 30 ரூபாவால் பறிபோன உயிர்

ஒரேயொரு 30 ரூபாவால் சிறுவன் ஒருவரின் உயிர் பறிக்கப்பட்ட சம்பவமொன்று உத்தரபிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பாக்பாத் மாவட்டத்தில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவன் 30 ரூபாவை கடனாக வாங்கியமை தொடர்பாக சக கிராமவாசிகள் மூவருடன் பிரச்சினை இருந்து வந்துள்ளது. இந்தப் பிரச்சினை தொடர்பாக சிறுவனுக்கும், அந்த 3 பேருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அதில் 3 பேரும் சேர்ந்து சிறுவனை கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளனர்.

இதுதொடர்பாக வழக்குப்பதிவு செய்த பொலிஸார், சிறுவனின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்துள்ளதோடு, மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காஷ்மீர்

20 மாவட்டங்களில்

## திறந்தவெளி கழிப்பிடம் ஒழிப்பு

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள 20 மாவட்டங்களில் மொத்தம் 6,650 கிராமங்கள் உள்ளன. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், இவை அனைத்தும் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதிகளை பிளஸ் மாடல் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

ஜம்மு காஷ்மீரில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் கழிவறைகள் கட்டி பயன்பாட்டுக்கு வந்ததோடு, அங்கு திடக் கழிவு, கழிவுநீர் மேலாண்மை திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் வெளியேறும் கழிவுநீர் உறிஞ்சுவதற்கு குழிகள் அமைக்கப்பட்டன. இதற்காக துப்புரவுத் துறை சுமார் 4 லட்சம் கழிவுநீர் உறிஞ்சு குழிகளை அமைத்தது. சமையலறை கழிவுநீர் வீட்டுத் தோட்டங்களுக்கு செல்லும் வசதிகள் இருந்தால், அதற்கான வழிகளைசெய்ய மக்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

மத்தியபிரதேசம்

## மாதவிடாய் நாட்களில் மாணவிகளுக்கு சலுகை

"மாதவிடாய் கால 5 நாட்களில் ஓரிரு நாட்கள் சிரமத்திற்குரியதாக உள்ளது என மாணவிகள் கூறுகின்றனர். இதனால், அந்த நாட்களில் மட்டும் அவர்கள் விடுப்பு எடுத்துக்கொள்ள அனுமதி அளித்துள்ளோம். மேலும் மாதவிடாய் எனும் இயற்கை உபாதை பற்றி பொதுவெளியில் பேச மாணவ, மாணவிகள் இடையே தயக்கம் காணப்படுகிறது. இந்த தவறான செயல்பாட்டை மாற்றுவதும் மாதவிடாய் விடுமுறை அளிப்பதன் முக்கிய நோக்கம் ஆகும்" என இந்திய மத்தியபிரதேச பல்கலைக்கழகத்தின் மாணவர் நலப் பிரிவின் பொறுப்பாளர் சுனில் திரிபாதி தெரிவித்துள்ளார்.



மத்தியபிரதேசத்தில் தர்மசாஸ்த்ரா தேசிய சட்டப் பல்கலைக்கழக மாணவிகளுக்கு சிறப்பு சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. மாதவிடாய் நாட்களில் விடுமுறை எடுத்துக்கொள்ள அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மத்தியபிரதேச அரசின் நிர்வாகத்தில் தர்மசாஸ்த்ரா தேசிய சட்டப் பல்கலைக்கழகம், ஜபல்பூரில் செயல்படுகிறது. இதன் நிர்வாகம் சார்பில் மாணவிகளுக்கு சிறப்பு சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் மாணவிகள் தங்கள் மாதவிடாய் காலங்களில் சிரமப்படும் நாட்களில் வகுப்புகளில் அமரத் தேவையில்லை. விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்தப் பல்கலைக்கழகத்தின் மாணவர் நலப் பிரிவின் பொறுப்பாளர் சுனில் திரிபாதி கூறும்போது, "மாதவிடாய் கால 5 நாட்களில் ஓரிரு நாட்கள் சிரமத்திற்குரியதாக உள்ளது என மாணவிகள் கூறுகின்றனர். இதனால், அந்த நாட்களில் மட்டும் அவர்கள் விடுமுறை எடுத்துக்கொள்ள அனுமதி அளித்துள்ளோம். மேலும் மாதவிடாய் எனும் இயற்கை உபாதை பற்றி பொதுவெளியில் பேச மாணவ, மாணவிகள் இடையே தயக்கம் காணப்படுகிறது. இந்த தவறான செயல்பாட்டை மாற்றுவதும் மாதவிடாய் விடுமுறை அளிப்பதன் முக்கிய நோக்கம் ஆகும்" என தெரிவித்துள்ளார்.

> **எனினும் இந்த சலுகை பெண் பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அளிக்கப்படவில்லை**

இந்த சலுகை மாணவிகள் இடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. எனினும் இந்த சலுகை பெண் பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அளிக்கப்படவில்லை. ஏனெனில், இந்த காரணத்திற்கு என அறிவிக்காமல் மேலதிக விடுமுறை நாட்களை முதல்வர் சிவராஜ் சிங் சவுகான், கடந்த வருடம் அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் அறிவித்துள்ளார். இதன்படி பெண் ஊழியர்களுக்கு ஆண்டுக்கு 20 நாட்கள் விடுமுறை கிடைக்கிறது. ஆண்களுக்கு இதர மாநிலங்களில் உள்ளது போல் 13 நாட்கள் மட்டுமே ஆகும்.

ரஷ்யா



## உக்ரேனின் 9 டிரோன்களை சுட்டு வீழ்த்திய ரஷ்யா

ரஷ்யா-உக்ரேன் போர் 20 மாதங்களாக தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. சமீப காலமாக இரு நாடுகளும் அடிக்கடி டிரோன் தாக்குதல் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் ரஷ்யாவின் பெல்கொரோட் பிராந்தியத்தை குறிவைத்து உக்ரேன் இராணுவம் டிரோன் தாக்குதலை நடத்தியுள்ளது.

இதில் 9 உராகன் எம்.எல்.ஆர்.எஸ். டிரோன்களை ரஷ்ய இராணுவத்தினர் சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

இதன்மூலம் உக்ரேனின் தாக்குதல் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யா

நமது இறையாண்மையையும் ஆன்மிக மதிப்பையும்

## "காக்க போராடுகிறோம்"

கடந்த ஆண்டு, உக்ரேனின் டோனெட்ஸ்க் (Donetsk), லுஹான்ஸ்க் (Luhansk), சப்போரிழியா (Zaporizhzhia) மற்றும் கெர்சன் (Kherson) ஆகிய பகுதிகளை ரஷ்யா தங்கள் நாட்டுடன் ஒவ்வொன்றாக இணைத்து கொண்டது.

இணைக்கப்பட்ட இந்த 4 பகுதிகளில் சில நாட்களுக்கு முன் ரஷ்யாவின் மத்திய தேர்தல் ஆணையம் தேர்தல் நடத்தி, அத்தேர்தலில் ரஷ்ய பிரதிநிதிகள் வெற்றி பெற்றதாகவும் அறிவித்தது. ஆனால், உக்ரேன் மற்றும் மேற்கத்திய நாடுகள் இந்த தேர்தலை ஒப்பு கொள்ளாமல் புறக்கணித்துள்ளன.

இந்த தேர்தல் வெற்றியை கொண்டாடும் விதமாக நாட்டு மக்களுக்கு ரஷ்ய ஜனாதிபதி வீடியோ மூலமாக உரையாற்றியுள்ளார்.

இந்த உரை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:

ரஷ்யா தனது இறையாண்மையையும், ஆன்மிக மதிப்பையும் காத்து கொள்ளவே போராடி வருகிறது. இதனால்தான் இந்த ரஷ்ய- உக்ரேன் போரே ஏற்பட்டது. நாம் நமது தாயகத்திற்காக போராடுகிறோம். நமது ஒற்றுமைக்காகவும், வெற்றிக்காகவும் நாம் சண்டையிடுகிறோம்.

அகில இலங்கை ரீதியிலான குத்துச்சண்டை போட்டியில்

# வவுனியாவுக்கு ஒரு தங்கம், மூன்று வெள்ளிப் பதக்கங்கள்

■ க. அகரன்

அகில இலங்கை ரீதியிலான குத்துச்சண்டை போட்டியில் வவுனியா மாவட்டம் ஒரு தங்கம், மூன்று வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

சுமார் 113 பாடசாலைகள் பங்கு பற்றிய குறித்த குத்துச்சண்டை போட்டியிலேயே ஒரு தங்கம் மற்றும் மூன்று வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று வவுனியா மாவட்டம் நான்காமிடத்தைப் பிடித்துள்ளது.

பயிற்றுவிப்பாளர் மு.நிக்சனின் பயிற்றுவித்தலின் கீழ் பூந்தோட்டம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி யூ.கீர்த்தனா 47 கிலோ கிராம் தொடக்கம் 60 கிலோ கிராம் வரையிலான எடைப் பிரிவில்




தங்கப் பதக்கத்தையும் ஏனைய இரண்டு மாணவிகள் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும், பூந்தோட்டம் பாடசாலை மாணவி ஒரு வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## நிலுக ஓய்வு

இலங்கையின் சிறந்த பேட்மிண்டன் வீரரான நிலுக கருணாரத்ன, விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக சர்வதேச ஒலிம்பிக் குழு (IOC) தலைமையகத்தில் இடம்பெற்ற அமர்வில் வைத்து அறிவித்துள்ளார்.

இவர், மூன்று தடவைகள் ஒலிம்பிக்கிலும், பல சர்வதேச போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பல பதக்கங்களை வென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில்

## பட்டிருப்பு வலயம் முதலிடம்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியில் பட்டிருப்பு கல்வி வலயம் 179 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை வென்றுள்ளது.

இப்போட்டியில் முதலிடம் பெற்ற பட்டிருப்பு கல்வி வலயத்தில் செட்டிபாளையம் மகா வித்தியாலயம் ஒன்பது தங்கப் பதக்கங்களையும், களுதாவளை மகா வித்தியாலயம் எட்டு தங்கப் பதக்கங்களையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

திருக்கோவில் கல்வி வலயம் மற்றும் அக்கரைப்பற்று கல்வி வலயங்கள் தலா 92 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளன.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## வொல்வ்ஸிடம் தோற்ற நடப்புச் சம்பியன்கள் சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸின் மைதானத்தில் வெள்ளிக்கிழமை (29) நடைபெற்ற போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியனாக மன்செஸ்டர் வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற லிவர்பூலுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் வென்றுள்ளது.

இப்போட்டியில் மனிதத் தவறு காரணமாக லிவர்பூலுக்கு தவறாக ஓஃப் சைட் என கோலொன்று மறுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை தமது




மைதானத்தில் நடைபெற்ற கிறிஸ்டல் பலஸுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றுள்ளது.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற லுட்டன் டெளணுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய மட்டத்துக்குத் தெரிவான ஆகில் மிகாவுக்கு வரவேற்பு

■ எம்.என்.எம். அப்ராஸ்

கிழக்கு மாகாணத்தின் மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் 14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 80 மீற்றர் தடைதாண்டல் ஓட்ட நிகழ்ச்சியில் பங்குபற்றி முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவான கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவன் எம்.எம்.எம். ஆகில் மிகா மற்றும் மாகாண விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய ஏனைய மாணவர்களையும் அம் மாணவர்களை பயிற்றுவித்து, போட்டிகளுக்கு அழைத்துச் சென்ற உடற்கல்வி ஆசிரியர் ஏ.ஜே.எம். சஸான், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களான எம்.ஜே.எம். முபீத், ஏ.ஜே.எம். சாபித் ஆகியோரை வாழ்த்தி வரவேற்கும் கௌரவிப்பு நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.ஐ. அப்துல் ரஸாக்கின் தலைமையில், பிரதி அதிபர் எம்.ஆர்.எம்.



நௌஸாட்டின் நெறிப்படுத்தலில் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

மேற் குறித்த அனைவரும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பாடசாலை சமுகத்தினரால் மாலை அணிவித்து பெரும் வரவேற்பளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர். இந்நிகழ்வில் பாடசாலையின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் எம்.ஜே.எம்.முபீத்தால் ஆகில் மிகாவுக்கான வெற்றிப் பரிசாக இலங்கை தேசிய மெய்வல்லுநர் சங்கத்தால் அதன் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட தங்க நினைவுச் சின்னம் ஒன்றும் பரிசளிக்கப்பட்டுள்ளது.

மேலும் பங்குபற்றிய ஏனைய மாணவர்களும் மாணவர்களை பயிற்றுவித்து அழைத்துச் சென்ற ஆசிரியர்கள், தங்கப் பதக்கம் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவான எம்.எம்.எம். ஆகில் மிகாவின் பெற்றோர் ஆகியோர் ஆசிரியர், மாணவரால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 02 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.